**கொடபொல பிரதேச சபை**
**மாத்தறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 05 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜனவரி 03 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களில் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கொடபொல பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டில் கூட்டி மதிப்பிடப்பட்ட ரூபா 770,725 ஆன முத்திரைக் கட்டண வருமானம் மீளாய்வாண்டில் சரிசெய்கையில் கூட்டுமொத்த நிதியத்திற்கு செம்மை செய்யாது தொங்கல் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) அறவிடப்பட்டிருந்த ரூபா 255,674 ஆன நிலையான கட்டணம் உள்நாட்டு வருமான ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்படாமல் தொங்கல் கணக்கு ஊடாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபையை வழுவூட்டும் வேலைத்திட்டத்தின் கீழ் முன்னைய ஆண்டிற்காக கிடைத்த ரூபா 4,000,000 தொகையை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டதனால் வருட வருமானம் சமமான பெறுமானத்தால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சபைக்கு சொந்தமான 13 கட்டிடங்களினதும் 02 காணிகளினதும் பெறுமானம் மற்றும் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற ரூபா 99,850 ஆன நீர் உபகரண தொகையின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்காததுடன் மொத்த நீர் கட்டணக் கணக்கு மீதி ரூபா 116,175 மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டில் வேலைக் கணக்கிலிருந்து பொதுக் கணக்கிற்கு மாற்றப்பட்ட ரூபா 1,524,000 ஆன பெறுமதி கடன்கொடுனர் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டதனால் கடன்கொடுனர் மீதி சமமான பெறுமதியால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 தொங்கல் கணக்கு

கூட்டுத்தொகை ரூபா 1,460,873 ஆன தொங்கல் கணக்கின் மீதி தொடர்பாக செம்மையாக்கல் செய்து கணக்கை சீர் செய்யாது பல்வேறு கணக்கிற்கு பதிவழித்ததனூடாக தொங்கல் கணக்கு தீர்க்கப்பட்டிருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தொகை ரூபா 70,078,685 ஆன பெற வேண்டிய கணக்கு மீதியினுள் 03 வருடத்தையும் விஞ்சிய ரூபா 1,331,796 ஆன 74 மீதிகளும் கூட்டுத்தொகை ரூபா 71,461,313 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதியினுள் 03 வருட காலத்தையும் விஞ்சிய ரூபா 35,212,286 ஆன 92 மீதிகளும் உள்ளடங்கியிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கூட்டுத்தொகை ரூபா 104,562,609 ஆன நிலையான சொத்துக்கள் முறையான தரத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்து பதிவேடு மற்றும் காணி தொடர்பான உரித்துரிமை உறுதி, ரூபா 2,535,552 ஆன 14 வைப்பு மீதிகள் தொடர்பான பட்டோலை மற்றும் காலப்பகுப்பாய்வும் சமர்ப்பிக்கப்படாததன் காரணமாக கணக்காய்வின் போது அவைகளை திருப்தியுடன் ஆய்வு செய்ய முடியாமல் இருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 193 பிரகாரம் பாதீட்டு மற்றும் குறை நிரப்பு செலவுகளுடன் செலவு விடயங்களின் உள்ளவாறான செலவும் மிகைகள் மற்றும் பற்றாக்குறைகளுக்கான காரணம் குறிப்பிடும் கூற்றொன்று சமர்ப்பித்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய் வருமானம் ரூபா 2,854,361 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவுகள் விஞ்சிய வருமானம் ரூபா 4,439,133 ஆகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 1,584,772 ஆன வீழ்ச்சியொன்று காட்டப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் மீண்டுவரும் செலவினம் மொத்த மீண்டுவரும் வருமானத்தின் 94 வீத அளவு உயர் பெறுமானத்தை பெற்றிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவி, சுய சம்பாதிப்பு வருமானம் மற்றும் மீண்டுவரும் செலவு தொடர்பான சுருக்கமான விபரம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| வருடம் | மொத்த மீண்டுவரும் வருமானம் | வருமான உதவி | சுய சம்பாதிப்பு வருமானம் | மொத்த மீண்டுவரும் செலவு | சுய சம்பாதிப்பு வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 46,896,438 | 25,245,266 | 21,651,172 | 44,042,077 | (22,390,905) |
| 2014 | 38,812,421 | 16,453,104 | 22,359,317 | 34,373,288 | (12,013,971) |
| 2013 | 32,199,000 | 11,596,580 | 20,602,420 | 26,602,163 | (5,999,743) |

இது தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்ட அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுக்குள் வருமான உதவிகளில் வளர்ச்சியொன்று காட்டப்பட்ட போதும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் சுய சம்பாதிப்பு வருமானங்களில் குறைவொன்று காணப்பட்டது.

(ii) ஒவ்வொரு வருடத்திலும் மீண்டுவரும் செலவு தொடர்ந்து அதிகரித்து வேகத்தின் கனிசமான தொகையின் வளர்ச்சி அடைந்து இருந்த போதிலும் அவ் நிலமை சபையில் கட்டுப்பாடுகளின் மீது சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) சபையின் சுய சம்பாதிப்பு வருமானத்தை போன்று இருமடங்கையும் விஞ்சிய பெறுமானத்தில் மீளாய்வாண்டின் மீண்டுவரும் செலவினம் அதிகரித்திருந்தது.

(iv) வருமான உதவி கிடைக்கப்பெறாவிடின் சுய சம்பாதிப்பு வருமானத்தினால் எவ்விதத்திலும் மீண்டுவரும் செலவினத்தை மீள் நிரப்பிகொள்ளமுடியாத நிலைமை காட்டப்படுகிறது.

(v) மேல் குறிப்பிடப்பட்ட இலக்கம் (i) தொடக்கம் (iv) வரையான பந்திகளில் குறிப்பிடப்படும் விடயங்களிலின் பிரகாரம் வருமான நிலைமையை உயர்துவதற்கு போன்று செலவினம் கட்டுப்படுத்துவதற்கு சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டி உள்ளது எனவும், அதற்காக முறையான வேலைதிட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைபடுத்தப்பட வேண்டியும், அவ்வாறு செய்யப்படாத போது சபையின் நிலவும் பலவீனமான நிதி முகாமை காரணமாக சிக்கலான நிலைமை உருவாக கூடும் எனவும் அதன் ஊடாக நிலைத்திருப்பது தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்பட முடியும் எனவும் அவதானிக்கப்பட்டன.

## 2.3 செயற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது செயற்பாட்டு மூலதனம் ரூபா 7,081,537 இனால் அதிகரித்திருந்தது. ஆயினும் கடன்பட்டோர் மீதிகளுக்குள் 03 வருடத்தை விஞ்சி அறவிடபடாமல் நிலவிய ரூபா 45,083,975 ஆன மீதிகள் உள்ளடங்கிருந்தமையால் செயற்பாட்டு மூலதனத்தால் குறிப்பிடப்பட்ட பிரகாரம் திரவ தன்மை நிலவவில்லை.

## 2.4 வருமான நிருவாகம்

### 2.4.1 வீத வரி

மீளாய்வாண்டின் ரூபா 264,234 ஆன ஆரம்ப நிலுவை மீதி மற்றும் பற்றுச்சீட்டிடலோடு ரூபா 431,356 அறவிடப்படவேண்டிருந்தது. ஆரம்ப நிலுவை மீதிகளின் 45 சதவீதமும் பற்றுச்சீட்டிடலின் 73 சதவீதமும் ஆன்டினுள் அறவிடப்பட்டிருந்தது. நிலுவை மீதி அறவிடல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1)(அ) பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் நிலுவை மீதி உயர் பெறுமானத்தை பெற்றிருந்தது.

### 2.4.2 ஏக்கர் வரி

மீளாய்வாண்டின் ரூபா 320,694 ஆன ஆரம்ப நிலுவை மீதி மற்றும் பற்றுச்சீட்டிடலோடு ரூபா 360,505 அறவிடப்படவேண்டிருந்தது. ஆரம்ப நிலுவை மீதிகளின் 29 சதவீதமும் பற்றுச்சீட்டிடலின் 61 சதவீதமும் அறவிடப்பட்டிருந்துது. தொடர்ந்து நிலவிய நிலுவை மீதி அறவிடல் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கான சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 சந்தை மீன் தட்டு வரி

மீளாய்வாண்டின் ஆரம்ப நிலுவை மீதி ரூபா 97,255 ஆனதுடன், அப் பெறுமானத்தால் எவ்விதமான பணமும் ஆண்டினுள் அறவிடபட்டிருக்கவில்லை. நிலுவை மீதி அறவிடல் தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கான சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 நீர் கட்டணம்

கூட்டுத்தொகை ரூபா 1,262,303 ஆன ஆரம்ப நிலுவை மீதி மற்றும் ரூபா 2,780,474 ஆன ஆண்டின் பற்றுச்சீட்டிடலோடு ரூபா 4,042,777 அறவிடப்படவேண்டிருந்தது. ஆரம்ப நிலுவையின் 87 சதவீதமும் ஆண்டின் பற்றுச்சீட்டிடலின் 57 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தமையால் ஆண்டு இறுதியில் கனிசமான நிலுவை மீதிகள் நிலவியது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) **சபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள்**

சபைக்கு எதிராக மாத்தறை மாவட்ட நீதி மன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கொள்று சமாதானமாக்கப்பட்டு 03 ஆண்டுகள் கடந்திருந்தும் வழக்கிற்கான வைப்பு செய்துள்ள ரூபா 40,000 பிணைப் பணத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை.

(ஆ) **மனித வள முகாமைத்துவம்**

ஆரம்ப தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஆளனியை விஞ்சி 12 நபர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதும் அம் மேலதிக ஆளனியை முறையாக்கிக்கொள்ளவோ இரண்டாம் பிரிவில் காணப்பட்ட 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை.

### 3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கீழே குறிப்பிடப்பட்ட விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1996 மே முதல் 2005 ஜூலை வரை காலத்திற்காக துசித சினிமா மண்டபத்தினால் நிலுவையாக காணப்பட்ட ரூபா 419,132 ஆன பணத்தை அறவிட மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழுக்கிற்கு சபையால் என்தவொறு அலுவளரும் சமூகமளிக்காத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக நிலுவைப் பணத்தை அறவிடுவதலில் நிச்சமின்மை நிலவுவதனாகவும் அது சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டமாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி ஆணையாளரினால் ஆதன கடன்களுக்கான வட்டியை முறையாக தீர்கப்படாததன் காரணமாக மீளாய்வாண்டு இறுதியில் அறவிடப்பட வேண்டிய வட்டியின் கூட்டுத்தொகை ரூபா 205,423 ஆனது.

(இ) சபையினால் தேசீய வருமான ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தவேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி பணத்தை உறியபடி அனுப்பபடாததன் காரணமாக ரூபா 35,051 ஆன நட்டப்பணத்தை செலுத்த வேண்டியிருந்தது.

### 3.3 கழிவு பொருள் முகாமை

சபை அதிகார பிரதேசத்தில் 20 கைதொழிள் சாலைகளின் ஓர் கைதொழிள் சாலையின் கழிவுகள் மாத்திரம் சபை மூலம் எடுக்கப்படுவது அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய கைதொழிள் சாலைகளின் கழிவுகள் எடுக்கப்படும் முறையை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீடு பிரகாரம் ஓர் செலவின விடயத்தின் ரூபா 2,322,000 ஆன மொத்த ஏற்பாடும், 07 செலவின விடயங்களின் ரூபா 159,960,687 தெகையான சேமிப்பும், 02 செலவின விடயங்களின் எல்லை விஞ்சிய ரூபா 5,611,034 ஆன செலவும், 03 வருமான விடயங்களின் அடையப்பெறாத எதிர்பார்கப்பட்ட வருமானம் ரூபா 167,039,492 ஆனமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமானங்கள் 133 மற்றும் 134 ல் குறிப்பிடப்பட்டுள்ள சட்ட ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதிய இலக்க தபபா/யஹ/01/ந.ச.லே கொண்ட தெற்கு உள்ளூராச்சி ஆணையாளர் சுற்றிக்கை பிரகாம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று செய்யபட்டிருக்காத போதிலும், சபையினால் நியமிக்கப்ட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு அலுவலருக்கு மீளாய்வாண்டில் சம்பளம் மற்றும் கொடுப்பணவாக ரூபா 441,964 செலுத்தப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமை குழு

2009 யூன் 09 திகதிய இலக்க DMA/2009(i) கொண்ட முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிருவப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பயன்படுத்தப்படாத குறைப்பயன்பாட்டிற்குட்பட்ட சொத்துக்கள்

(i) 2009 ஆண்டின் தெற்கு மாகாண விளையாட்டு மற்றும் இளைஞர் நடவடிக்கைக்கான அமைச்சின் கிடைத்திருந்த உடற்பயிர்ச்சி உபகரண தொகுதியை பயிற்றப்பட்ட ஆலோசகர் இல்லாததன் காரணமாக மீளாய்வாண்டு இறுதி வரையும் பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(ii) சபைக்கு சொந்தமான மிட்சுபிசி கப் வண்டி 2014 பெப்ரவரி மாதம் முதல் செயற்படாது காணப்பட்ட போதும், அதனை பழுதுபார்த்து செலுத்துவதற்கு

பயன்படுத்திக்கொள்ள அல்லது பராதீனம் செய்ய சபை மூலம் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(iii) பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு ஒதுக்கத்தின் கீழ் சபைக்கு கிடைத்திருந்த 53 சங்கீத உபகரணங்களை எவ்வித பயன்பாட்டிற்கும் உபயோகிக்காது செயற்படாது காணப்பட்டன.

(ஆ) **வருடாந்த பண்டகக் கணிப்பீடு**

மீளாய்வாண்டில் பண்டகக் கணிப்பீட்டின் பிரகாரம் ஏலத்தில் விற்பதற்கு சிபார்சு செய்யப்பட்ட பெறுதமதி ரூபா 64,037 ஆன மர இருப்பை 2016 ஆகஸ்ட் மாதத்திலும் ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு.

(ஆ) பாதீட்டு கட்டுப்பாடு.

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஈ) மனித வள முகாமைத்துவம்.